மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6872—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பொங்குபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பொங்குபாளையம் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, பொங்குபாளையம் கிராமத்திலிருந்து சரியாக 5 கி.மீ. இடைவெளியில் பெருமாநல்லூர் என்கின்ற பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வரைமுறைக்கேற்ப இரு சுகாதார மையங்களுக்கிடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கி.மீ.-க்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், அங்கு 5 கி.மீ. தூரத்திற்குள்ளாகவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுது பொங்குபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

2022 ஏப்ரல் 18]

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி, பொங்குபாளையம் ஊராட்சிப் பகுதியில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்த ஊராட்சிப் பகுதியில் சுமார் 25,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். மேலும், அந்தப் பகுதியில், பீகார், ஒடிசா போன்ற வெளி மாநிலங்களிலிருந்து வந்த தொழிலாளர்கள், அருகிலே உள்ள நேத்தாஜி பூங்காவிலுள்ள சிப்காட்டில் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே, பொங்குபாளையம் ஊராட்சிப் பகுதியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திக் கொடுத்தால், பொங்குபாளையம் ஊராட்சியிலுள்ள பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேராம்பாளையம் என்கின்ற கிராமத்திலிருந்த துணை சுகாதார நிலையத்திலிருந்து, ஆரம்ப சுகாதார நிலையத்திலிருக்கிற மருத்துவர்களோடு காணொளியின் வாயிலாகத் தொடர்பு கொண்டு, அங்குள்ள மக்களையும் தொடர்புகொள்ள வைத்து, அவர்களுக்கு மருத்துவம் நேரடியாகப் பார்த்து, மருந்துகளைத் தருகின்ற ஒரு புதிய திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நேற்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டது.* E-Sanjeevani *என்கின்ற அந்தத் திட்டத்தின்படி, தமிழகத்தில் 4,848 மருத்துவமனைகளிலிருந்து நடைபெறக்கூடிய சேவையை நேற்றைக்கு மேட்டுப்பாளையத்தில் தொடங்கி வைத்திருக்கிறோம். எனவே, பொங்குபாளையத்திலிருந்து, அவர் சொல்கின்ற, பக்கத்திலிருக்கின்ற பெருமாநல்லூர் சுகாதார நிலையத்தோடு காணொளியின் வாயிலாக அந்தப் பயனாளிகளை பங்கு பெறச் செய்து, மருத்துவப் பயன் கிடைக்க வழி செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2022 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணக்கம்பாளையம் ஊராட்சி, திருப்பூர் மாநகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ளது. அங்கு கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், ஆயிரக்கணக்கான விவசாயிகளெல்லாம் அந்த* area*-வில் இருக்கிறார்கள். அந்தப் பகுதி, நெசவாளர்களும் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் உள்ள கிராமத்திற்கு புதியதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, 67 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார மையங்கள்; 348 துணை சுகாதார மையங்கள்; ஆக மொத்தம் 415 மருத்துவ மையங்கள் திருப்பூரிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 30 ஆயிரம் என்கிற அளவிலே அங்கே பொது மக்களுக்கான எண்ணிக்கை இல்லை. 17 ஆயிரம் என்கின்ற அளவிலேதான் இருக்கிறது. ஒன்றிய அரசின் வரையறை என்பது 30 ஆயிரம் பொது மக்கள் இருக்க வேண்டும் அல்லது 8 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். தரைப் பகுதிக்கு இது பொருந்தும். மலைப் பகுதிகளுக்கு 20 ஆயிரம் பொது மக்கள் என்கின்ற இலக்கு இருக்கின்றது. அவர் பக்கத்திலிருக்கின்ற கிராமங்களையெல்லாம் ஒன்றிணைத்து 30 ஆயிரம் என்று சொல்கிறார் என்று கருதுகிறேன். சுகாதாரத் துறையின் அலுவலர்களை அனுப்பி, நேரடியாகக் கண்காணித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர்* S. *இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத்*

2022 ஏப்ரல் 18]

தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அரியப்பாடி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கிருக்கின்றவர்கள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால், சுமார் 12 கிலோ மீட்டர் தூரமுள்ள ஆரணி நகருக்குச் செல்ல வேண்டும். எனவே, அரியப்பாடி ஊராட்சியில் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர் சொன்ன கிராமத்தையும் பக்கத்திலேயிருக்கின்ற கிராமங்களையும் ஒன்றிணைத்து 40,000–க்கும் மேற்பட்டவர்கள் என்று சொல்கிறார். வரையறை என்பது அந்தக் கிராமத்தில் 30,000 இருக்க வேண்டும் என்பதாகும். இருந்தாலும்கூட வணக்கத்திற்குரிய தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களைத் தொடர்ந்து தினந்தோறும் அறிவித்துக்கொண்டிருக்கிறார். நேற்றைக்குக்கூட நீலகிரி மாவட்டத்தில் தோடர்கள், படுகர்கள் வசித்துக் கொண்டிருக்கின்ற மலை மாவட்டங்களில் வாகனங்களின்மூலம் நேரடியாக தொலைதூர கிராமங்களுக்கான மருத்துவச் சேவைத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது. 389 புதிய வாகனங்களின்மூலம், ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு* Pharmacist, *ஒரு ஓட்டுநர் என்கின்றவகையில் தற்காலிகக் கூடாரங்கள், மருந்து, மாத்திரை வசதிகள், பகுப்பாய்வுக்கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கிராமங்களுக்கே தேடிச் சென்று மருத்துவம் பார்க்கின்ற வசதி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, நிச்சயம் சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கிராமங்களுக்கு இந்த வாகனங்களை அனுப்பி, மருத்துவம் பார்ப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் அரசு மருத்துவமனையில் கடந்த 6 வருடங்களாக*

[2022 ஏப்ரல் 18

மகப்பேறு மருத்துவர்கள் இல்லை. செவிலியர்களைக் கொண்டு அங்கு பிரசவம் பார்க்கப்படுகிறது. 11 மருத்துவர்கள் இருக்க வேண்டிய அரசு மருத்துவமனையிலே 3 மருத்துவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். மீதியிருக்கின்ற மருத்துவர்களைப் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு எவ்வளவு மருத்துவர் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்கின்ற பட்டியல் தயாரித்து MRB–க்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றது. நிச்சயம், செய்யூர் அரசு மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு முதல்வர் அவர்களையும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தின் மையப் பகுதியாக அமைந்துள்ள காவனூர் ஊராட்சிக்கு 9 கிலோ மீட்டர் தொலைவில்தான் விளாப்பாக்கம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. காவனூர் ஊராட்சியைச் சுற்றி கிட்டத்தட்ட 30,000 மக்கள் வசிக்கின்றனர். எனவே, அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு வருவதால், காவனூர் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதே கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார். காவனூர் ஊராட்சியைச் சுற்றிலும் இருக்கின்ற கிராமங்களோடு ஒருங்கிணைந்து 30 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கிறார். காவனூரில் மட்டும் 30,000 மக்கள்தொகை இருந்தால் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், பல்லவராயன்பத்தை, புதுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், கடந்த ஆட்சியில், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, ஏதோ சில அரசியல் காரணங்களுக்காக, அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக அமையவிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய அவசியத்தை ஏற்கெனவே, துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். நிச்சயம், அதற்கான பணிகள், அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.